# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
# (DEPOSITION OF WITNESS

**வா.சா.3-)**

அசல் வழக்கு எண். 110/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.நாட்ராயன் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | மகுடீஸ்வரன் | கிராமம் | சூலூர் |
| பணி | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 12.11.2025 is accordance with the provision of Act X of 3331

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்து துணை வட்டடாட்சியராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டாட்சியருக்கு அழைப்பாணை வந்தது. இந்த வழக்கில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வட்டாட்சியர் எனக்கு அங்கீகார கடிதம் அளித்துள்ளார். **30.10.2025 தேதியிட்ட அங்கீகார கடிதம் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வேலப்ப தேவர் மகன் பரமசிவம் வாரிசு சான்றிதழை கோரி விண்ணப்பம், அந்த விண்ணப்பத்தின் பேரில் நடந்த விசாரணை அதன் பெயரில் ஏற்பட்ட உத்தரவு மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் கொண்டு வந்துள்ளேன்.

2. கௌரி ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்த application status கொண்டு வந்துள்ளேன். 28.04.2022 **கௌரி தாக்கல் செய்த application status வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.04.2022 தேதியிட்ட கௌரி ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்த பிரமாண பத்திரம் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கௌரி ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்த ஆதார் அடையாள அட்டை வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கௌரி ஆன்லைன் மூலமாக**

**தாக்கல் செய்த முருகேஷ், சண்முகம் குடும்ப அட்டை வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட 10.02.1995 தேதியிட்ட பரமசிவத்தின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பரமசிவத்தின் இறப்பு 10.02.1995 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது. 12.04.2022 தேதியில் இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

3. **ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட சுய உறுதிமொழி வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை. கௌரியின் முகவரி, ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு அ-கிராமம், நகரம், கதவு எண்.51 , பெரிய வலசு, வீரப்பன் சத்திரம், தெருவில் வசிக்கும் திருமதி.கௌரி க/பெ.திரு.முருகேஷ் என குறிப்பிடப்பட்டுள்ளது. **வாரிசு சான்றிதழ் கோரி ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்த விண்ணப்பம் வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி விண்ணப்பத்தில் கௌரியின் முகவரி 320, சுக்கரமணிய வலசு, மாணிக்கம்பாளையம், ஈரோடு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின் தேதி என்ன என்றால் தேதி குறிப்பிடவில்லை. வட்டாட்சியர் அலுவலகத்தின் முத்திரை தேதி 05.04.2022 என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இறந்த இடம் 7/30, அங்கத்தேவர் வீதி, பள்ளபாளையம், இருகூர், சூலூர் வட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது. **ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட பொது மக்களின் வாக்குமூலம் வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பள்ளபாளையம் என்பது ஒட்டர்பாளையம் கிராமம், இருகூர் என்பது இருகூர் கிராமம் ஆகும். பொதுமக்களின் விசாரணை செய்ததில் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மொத்தம் 10 நபர்களின் கையொப்பம் உள்ளது, அந்த 10 நபர்களின் முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட வேலப்ப தேவர் மகன் பரமசிவம் வாரிசு சான்றிழ் தாக்கல் செய்கிறேன். **ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட வேலப்ப தேவர் மகன் பரமசிவம் வாரிசு சான்றிழ் வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** பரமசிவத்தின் மனைவியும், கௌரியின் தாயாருமான சரஸ்வதி இறந்ததற்கான ஆவணம் எதுவும் வாரிசு சான்றிதழ் கோர ஆன்லைன் மூலமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

**1,4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. வா.சா.ஆ.24 வாரிசு சான்றிதழ் சூலூர் வட்டாட்சியரால் வழங்கப்பட்டது என்றால்சரிதான். வாரிசு சான்றிதழ் கோரி மனு கொடுக்கும்போது அது சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டு தான் சான்றிதழ் வழங்கப்படும் என்றால் இணையவழியாக கிராம நிர்வாக அலுவலருக்கு செல்லும், பின்னிட்டு வருவாய் ஆய்வாளருக்கு செல்லும், பின்னிட்டு தலைமைஇடத்து துணை வட்டாட்சியருக்கு செல்லும், பின்னிட்டு தான் வட்டாட்சியருக்கு செல்லும். கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், தலைமைஇடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர்களின் பரிந்துரையின் பெயரில் வட்டாட்சியருக்கு மனு செல்லும். பின்னிட்டு வட்டாட்சியர் ஒப்புதல் பெயரில் வாரிசு சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.22 ஆவணத்தில் கண்ட மனுவானது வருவாய் ஆய்வாளரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வட்டாட்சியருக்கு வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வாரிசு சான்றிதழுக்கான விண்ணப்பத்தை கௌரி தயார் செய்து வட்டாட்சியர் அலுவலகத்தில் மேலெழுத்து வாங்கியுள்ளார் அதை இணையவழியில் தாக்கல் செய்யும்போது பதிவேற்றம் செய்துள்ளார். வா.சா.ஆ.23 பொது மக்கள் வாக்குமூலத்தை கிராம நிர்வாக அலுவலர் தான் பெறுவார் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்களை கிராம நிர்வாக அலுவலர் தான் நிரப்புவார் என்றால் இணையவழி விண்ணப்பத்திற்கு முன்பாக அவ்வாறு தான் நடைமுறை இருந்தது.

3. இணையவழி மூலமாக விண்ணப்பித்தாலும் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு தான் சான்றிதழ் வழங்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு விசாரணை செய்யும்போது இறந்தவரின் முகவரிக்கு சென்று விசாரணை செய்யப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.20 இறப்பு சான்றிதழ் சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவகலத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சூலூர் வட்டாட்சியரின் செயல்முறை ஆணை தேதி 06.09.2022 குறித்து நான் கொண்டு வந்துள்ள ஆவணங்களில் உள்ளதா என்றால் இல்லை. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன், நான் அந்த

காலகட்டத்தில் சூலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் இல்லை.

**மறுவிசாரணை**

1. கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், தலைமையிடத்து துணை வட்டாட்சியரின் விசாரணை அறிக்கை மற்றும் பரிந்துரை ஏதேனும் கோப்பில் இருந்ததா என்றால் தனியாக பரிந்துரை அறிக்கை எதுவும் இல்லை. இணையதளத்தில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ஆகியோர்களின் login இல் இருந்து வட்டாட்சியருக்கு forward செய்யப்படும். அது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**மறுகுறுக்குவிசாரணை**

1. வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்யும்போது கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், தலைமையிடத்து துணை வட்டாட்சியருக்கு ஆன்லைன் மூலமாக அனுப்பப்பட்ட பிறகு அவர்கள், விசாரணை செய்து மனுவை பரிந்துரையோ அல்லது நிராகரிப்போ செய்து அடுத்தநிலை அலுவலருக்கு forward செய்வார்கள். வா.சா.ஆ.16 application status ல் நிராகரிப்பு செய்ததாக குறிப்புகள் இல்லை. பரிந்துரையின் அடிப்படையில் வட்டாட்சியரால் வா.சா.ஆ.24 வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், அறிக்கை மற்றும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்டது என வட்டாட்சியரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur